# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319415

1. District : சிவகங்கை PS: உணவுப் பொருள் தடுப்பு Year: 2025 FIR No.: 6/2025 Date: 07.08.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, 1988 Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: as amended by P.C (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் 06.08.2025 நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு 16.15 hrs நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 07.08.2025 Time : 16.15 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Vol. II Time : 16.45 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: உதவி பின்பற்றுபவர் அலுவலகம், TANUVAS, திருப்பத்தூர்,
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : சிவகங்கை மாவட்டம்.
முறைக் காவல் எண் முகவரி சுமார் 35 கி.மீ வடக்கு

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு. சரவணன் (b) Father's/ Husband's Name : பாலசுந்தரம்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 31/2025 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : வேட்டுநர் (g) Address : கணேஷ் நகர், புதுக்கோட்டை ரோடு, திருப்பத்தூர் தாலுகா, சிவகங்கை மாவட்டம்.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திரு. கணபதி, உதவிப்பின்பற்றுபவர், TANUVAS, திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம்
2) திரு. பழனியப்பன், முகவர் (ரிட்டையர்) TANUVAS, திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- No delay -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு -

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் -

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 07.08.2025 தேதி மாலை 16.15 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தாலுகா, புதுக்கோட்டை ரோடு, கணேஷ்நகர் என்ற முகவரியில் வசிக்கும் பாலச்சந்திரன் என்பவரின் மகன் திரு.பா.சரவணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர், குற்றம் சுமத்தப்பட்ட சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர், TANGEDCO, உதவி மின்பொறியாளர அலுவலகத்தின் உதவி மின்பொறியாளர் திரு.கணபதி மற்றும் திரு.பழனியப்பன், முகவர் (Foreman) ஆகியோரைப் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முத.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
07.08.2025 at 17.15 hrs

Name: பெயர் (R. ஜெகதீஸ்)
Rank: நிலை ..... No. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு தென்மண்டலம்.

**சிவகங்கை ஊ.த.க பிரிவு குற்ற எண்.06/2025 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி -**

அன்னாரின் அனுமதி பெற்று, 07.08.2025-ம் தேதி, சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.06/2025 u/s.7(a) of Prevention of Corruption Act 1988, as amended by the P.C. (Amendment) Act 2018 என வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர்: பா.சரவணன் 31/2025, த/பெ பாலசந்திரன், கணேஷ்நகர், புதுக்கோட்டை ரோடு, திருப்பத்தூர் தாலுகா, சிவகங்கை மாவட்டம், பெறுநர்: காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சிவகங்கை, நான் மேற்கண்ட முகவரியில் வசித்துவருகிறேன் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். டிராவல்ஸ் வைத்து ஓட்டுநராக பணிபுரிந்துவருகிறேன். சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர், புதுக்கோட்டை ரோட்டில், கதவு எண் 27ST-4, என்ற முகவரியில் எனது மனைவி பிரியங்கா பெயரில் புதியதாக வீடு கட்டி முடித்துள்ளேன். அந்த வீட்டின் மின் இணைப்பு எண் 054760052019 ஆகும். இந்த மின் இணைப்பு Tarrif V ஆக உள்ளது. இதை Tarrif V லிருந்து வீட்டு பயன்பாட்டு மின்சாரமாக (Tarrif 1A) ஆக மாற்றி தர கோரி 05.08.2025-ம் தேதி இணையதளம் வழியாக மனு செய்திருந்தேன். அதற்கான பதிவு மற்றும் செயல்பாட்டு கட்டணம் ரூபாய் 220/-யை செலுத்தி ரசீது பெற்றுக்கொண்டேன். அதன்பிறகு 06.08.2025-ம் தேதி மதியம் சுமார் 01.20 மணியளவில் மேற்கண்ட விஷயம் தொடர்பான விண்ணப்ப மனுவை நேரில் சென்று கொடுப்பதற்காக திருப்பத்தூர் AE ஆபிஸ் போனேன். AE அங்கு இல்லாததால் அங்கு இருந்த ஒரு பெண் அலுவலரிடம் AE யை பார்த்து விண்ணப்ப மனுவை கொடுக்க வேண்டும் என்று சொன்ன போது அதற்கு அவர் தற்போது AE இங்கு இல்லை அவரிடம் போனில் பேசிக்கொள்ளுங்கள் என்று சொல்லி 9445853118 நம்பரை சொன்னார். நான் அந்த நம்பருக்கு எனது 7708945629 நம்பரில் இருந்து போன் செய்து மேற்கண்ட விபரங்களை சொல்லி விண்ணப்ப மனு கொடுக்க வந்திருப்பதாக தெரிவித்த போது நான் மாலை 04.00 மணிக்கு அலுவலகம் வந்துவிடுவேன். என்னை அப்போது வந்து பாருங்கள் என்று சொல்லி போனை வைத்துவிட்டார். பின்பு மாலை 04.15 மணியளவில் திருப்பத்தூர் உதவி மின்பொறியாளர் அலுவலகம் சென்று AE திரு கணபதி அவர்களை சந்தித்து எனது மனைவி பெயரில் கட்டியுள்ள வீட்டிற்கு Tarrif V லிருந்து வீட்டு பயன்பாட்டு மின்சாரமாக (Tarrif 1A) ஆக மாற்றி தர கோரிய விண்ணப்ப மனுவை சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் இணைத்து அவரிடம் கொடுத்த போது போர்மேன் பழனி வந்து உங்க வீட்டை பார்த்த பிறகு Testing fees-Rs.165, Shifting Charge-Rs.1105, RC Charge-Rs.330 ஆக மொத்தம் ரூபாய் 1600-ஐ ஆன்லைனில் கட்டிவிட்டு அந்த ரசீதையும் உங்கள் மனுவுடன் இணைத்து கொண்டுவந்து

கொடுங்கள்" என்று சொல்லி உங்களது மனு தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ள எனக்கும் போர்மேன் பழனியப்பனுக்கும் சேர்த்து ரூபாய் 1000/-ஐ கொடுங்கள் என்றும் சொன்னார். அதற்கு நான் அரசுக்கு செலுத்த வேண்டிய பணம் எல்லாம் செலுத்திவிட்டேனே என்று சொன்னதற்கு இது நாங்கள் செய்யும் வேலைக்காக நீங்கள் எங்களது செலவுக்கு தர வேண்டும் என்று சொன்னார் நான் என்னிடம் தற்போது பணம் இல்லை என்று சொன்னதற்கு பணத்தை ரெடி பண்ணிட்டு போர்மேன் பழனியப்பனிடம் ரூபாய் 1000/-ஐ கொடுத்துவிடுங்கள் என்று சொன்னார். பிறகு அங்கிருந்த போர் மேனை கூப்பிட்டு என்னோடு சென்று எனது வீட்டை பார்த்துவரும்படி சொன்னார். உடனே போர்மேன் பழனியப்பன் புதிய வீட்டை பார்வையிடவேண்டும் வாருங்கள் என்று அழைத்து சென்றார். புதிய வீட்டை பார்வையிட்ட பிறகு போர்மேன் பழனியப்பன் என்னிடம் உங்கள் வேலையை செய்வதற்கு AE கேட்ட பணம் ரூபாய் 1000/-தை சீக்கிரம் வந்து என்னிடம் கொடுங்கள் என்றும் ஒரு வேளை நான் அலுவலகத்தில் இல்லை என்றால் 9655088138 போன் நம்பருக்கு போன் பன்னுங்கள் நான் வந்து வாங்கி கொள்கிறேன் என்று சொன்னார். பணத்தை ரெடி பண்ணிட்டு வந்து சந்திக்கிறேன் என்று கூறிவிட்டு Testing fees-Rs.165, Shifting Charge-Rs.1105, RC Charge-Rs.330 ஆக மொத்தம் ரூபாய் 1600-ஐ ஆன்லைனில் கட்டிவிட்டு அதற்கான ரசீதை பெற்று எனது மனைவி பிரியங்கா பெயரிலான விண்ணப்பத்துடன் இணைத்து AE கணபதி அவர்களை சந்தித்து மனுவை கொடுத்தேன் அப்போதும் அவர் நீங்கள் ரூபாய் 1000/-ஐ கொடுத்த பிறகு உங்கள் வேலை முடித்து தரப்படும் என்று சொன்னார். பிறகு வீட்டிற்கு வந்து எனது மனைவியுடன் கலந்து ஆலோசித்தேன். லஞ்சம் கொடுக்க எங்களுக்கு விருப்பம் இல்லை. ஆகையால் Tarrif V விருந்து வீட்டு பயன்பாட்டு மின்சாரம் (Tarrif 1A ஆக) மாற்றி தர ரூபாய் 1000 லஞ்சம் கேட்ட திருப்பத்தூர் உதவி மின்பொறியாளர் AE கணபதி மற்றும் போர்மேன் பழனியப்பன் ஆகிய இருவர் மீதும் நடவடிக்கை எடுக்க இன்று 07.08.2025 மாலை 04.15 மணிக்கு புகார் அளிக்கிறேன். தாங்கள் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் எனது மனைவி பெயரிலான விண்ணப்ப மனுவையும் ஆவண நகல்களையும் இணைத்துள்ளேன். இப்படிக்கு, sd/xxxxx (பா.சரவணன்).

Sir, Received the complaint on 07.08.2025 at 16.15 hrs, genuineness of the complainant was verified through sources and found to be genuine. The Integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. Found prima facie for the allegation of the complainant. Since, the registration of Regular Case is warranted, the matter is intimated & obtained permission from the SP/SR, V&AC, Chennai,

and registered a case in Sivagangai V&AC Crime.No.06/2025 u/s 7(a) of Prevention of Corruption Act, 1988, as amended by the P.C.(Amendment) Act 2018 on 07.08.2025 at 16.45 hrs and took up for investigation. sd/xxxx (R.Jesudoss, Inspector of Police, V&AC, Sivagangai).

இந்த வழக்கின் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை சிவகங்கை, முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற நீதிபதி அவர்களுக்கும், மற்ற நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன்.

07/8/2025

Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Sivagangai.